தினமணி

**கோடை மழை: பலா, முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 02 May 2010 12:25:00 AM IST



முந்திரி மரத்தில் பூத்துள்ள பூக்கள்.

பண்ருட்டி, மே 1: சுட்டெரிக்கும் வெயில் காரணமாக பலா, முந்திரி மகசூல் பாதிக்கப்பட்டு வேதனை அடைந்திருந்த விவசாயிகள் வெள்ளிக்கிழமை இரவு பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பண்ருட்டி பகுதியில் சுமார் 17 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள முந்திரி காடுகளில் இருந்து முந்திரி கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இக் காடுகளுக்கு இடையே பலாவும் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே பருவம் தவறிய மழை, கடும் பனிப்பொழிவு, புயல் போன்ற காரணங்களால் முந்திரி மகசூல் பாதிக்கப்பட்டது.

நிகழாண்டில் கடந்த டிசம்பர் மாதம் பெய்த கனமழையால் நிலத்தில் ஈரப்பதம் அதிகரித்ததாலும், பருவநிலை மாற்றத்தால் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பூ எடுக்க வேண்டிய முந்திரியில் பூக்கும் தருணம் தாமதமானது. இந்நிலையில் வெயிலின் தாக்கம் அதிகரிப்பு காரணமாக முந்திரிப் பூக்கள் கருகி வந்ததால் மகசூல் பாதிக்கப்படும் என முந்திரி விவசாயிகள் வேதனை அடைந்திருந்தனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை இரவு பெய்த மழையால் முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து முந்திரி விவசாயிகள் கானங்குப்பம் பலராமன், மருங்கூர் ராஜசேகர், காடாம்புலியூர் டி.சரவணன், சி.கே.பூராசாமி ஆகியோர்

கூறியது:

தற்போது பெய்துள்ள மழை முந்திரி விவசாயிகளுக்கு நம்பிக்கையை தந்துள்ளது. இந்த மழையால் கருகியுள்ள பூக்கள் விழுந்து, அரும்புகள் வெடித்து காய் எடுப்பதுடன், முந்திரி கொட்டைகளும் திடமாக பெருக்கும். இதனால் 20 முதல் 25 சதவீதம் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் இதேபோல் இன்னொரு மழை பெய்தால் நன்றாக இருக்கும். மேலும் தண்ணீர் இன்றி பெருக்காமல் இருந்த பலாவுக்கு ஏற்ற மழை இது என்றனர்.

**தோட்டக்கலை விவசாயிகளுக்குப் பயிற்சி**

First Published : 03 May 2010 12:56:29 AM IST

கரூர், மே 2: கரூர் மாவட்டம், தாந்தோன்றிமலை வேளாண்மை விரிவாக்க மையத்தில் தோட்டக்கலை விவசாயி களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

ஆத்மா எனப்படும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் நிதியுதவியில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது. மத்திய அரசின் நிதியுதவியுடன் ஆத்மா திட்டம் கரூர் மாவட்டத்தில் 2007-08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பயிற்சியை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் தலைமைவகித்து தொடக்கிவைத்தார். பரமத்தி வட்டார தோட்டக்கலை அலுவலர் கலா, ஆத்மா திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும், புதிய தோட்டக்கலை தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார்.

தாந்தோன்றிமலை வட்டார தோட்டக்கலை அலுவலர் நடராஜன் சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதன் பயன்கள், சொட்டுநீர்ப் பாசனத்துக்கான மானியம் பெறும் வழிமுறைகள் குறித்துப் பேசினார்.

பயிற்சிக்குத் தேவையான ஏற்பாடுகளை தாந்தோன்றிமலை வட்டார தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பரமேஸ்வரன், செந்தில், சுமதி ஆகியோர் செய்திருந்தனர்.

**பண்ருட்டியில் பலாப்பழ வரத்து அதிகரிப்பு**

First Published : 03 May 2010 12:34:27 AM IST



பண்ருட்டி வட்டம் கீழ்மாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பி.ஆர்.மாயவேல் (வலது) தோட்டத்தில் விளைந்த 65 கிலோ எடையுள்ள மெகா சைஸ் பலாப்பழம்.

பண்ருட்டி,மே 2: சீசன் தொடங்கியுள்ளதால் பண்ருட்டி சந்தையில் பலாப்பழத்தின் வரத்து அதிகரித்துள்ளது. சராசரி அளவுள்ள ஒரு பழத்தின் விலை ரூ150 முதல் ரூ.200 வரை விற்கப்படுகிறது.

பலாப்பழம் என்றவுடன் அனைவரின் நினைவுக்கு வருவது பண்ருட்டி. பண்ருட்டி கெடிலம் ஆற்றுக்கு தென் பகுதியில் வளம் நிறைந்த செம்மண் நிலப்பகுதியில் அடந்து வளர்ந்துள்ள முந்திரி காடுகளுக்கு இடையேயும், வீட்டுத் தோட்டத்திலும் பலா மரம் வளர்க்கப்படுகிறது.

இப்பகுதியில் விளையும் பலாப்பழங்கள் மிகுந்த சுவை கொண்டவை.

இதனால் தமிழகம் உள்ளிட்ட வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் பண்ருட்டி பலாப்பழத்தை விரும்பி சாப்பிடுகின்றனர். இதுகுறித்து பலா விவசாயிகள் சீரங்குப்பம் ஆர்.மணிவண்ணன், சாத்திப்பட்டு எழில், காடாம்புலியூர் டி.சரவணன் ஆகியோர் கூறியது:

மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரை பலாப்பழம் சீசன். இக்காலத்தில் பலா மரத்தை பராமரிக்க வேண்டும். அவ்வப்போது காய்கள் பழுத்துள்ளனவா, பூச்சிகள் தாக்கியுள்ளதா, களவு போகாமல் உள்ளதா என பார்க்க வேண்டும். குறைவான எண்ணிக்கையில் பலா மரம் வைத்துள்ளவர்கள் அவர்களே பராமரித்துக்கொள்வர். அதிக அளவில் மரம் வைத்துள்ளவர்கள் குத்தகைக்கு விட்டுவிடுவர்.
குத்தகை விடும்போது மரத்தின் தரம், காயின் சுவை மற்றும் அளவு ஆகியவற்றை கணக்கிட்டு பிஞ்சு ஒன்று ரூ.20 முதல் ரூ.30 வரையில் விலை பேசி ஒப்பந்தம் செய்வர்.
மரத்தின் அளவு மற்றும் வயதுக்கு தகுந்தாற்போல் 20 முதல் 50 பிஞ்சுகள் வரைவிட்டுவிட்டு, மரத்தில் இருந்து கழிக்கப்படும். ஏனைய பிஞ்சுகளை சில சமயத்தில் விற்றுவிடுவோம்.
அதிக அளவு பிஞ்சுகளை மரத்தில் விட்டால் மலட்டு தன்மை அடைவதுடன் சில சமயத்தில் மரம் இறந்துவிடும். இன்னும் ஓரிரு வாரத்தில் முழு அளவில் பலாப்பழம் அறுவடை தொடங்கிவிடும் என கூறினர்.
பண்ருட்டி - கும்பகோணம் சாலையில் பலா பழம் கமிஷன் மண்டி வைத்துள்ள பி.ஆர்.மாயவேல் கூறியது:
விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் அறுவடை செய்து கொண்டு வரும் பலாப்பழங்களை விற்று கொடுத்து வருகின்றோம். இதற்கு ஊதியமாக குறிப்பிட்ட அளவு கமிஷன் பெற்றுக்கொள்வோம்.
பண்ருட்டியில் இருந்து தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், மும்பை, பெங்களூர், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு டன் கணக்கில் அனுப்பி வருகின்றோம்.
மும்பையில் பலாப்பழத்தின் ஜூஸ் அதிக அளவு விற்பனை ஆவதல் அங்கு அதிக அளவு பலாப்பழங்கள் அனுப்பப்படுகின்றன. ஒரு டன் பலாப்பழம் ரூ.15 ஆயிரத்துக்கும் மேல் விலை போகிறது. கொல்கத்தா மாநிலத்தில் பலா பிஞ்சுக்கு அதிக கிராக்கி உள்ளதால் ஒரு கிலோ ரூ.25 வரை விலை போகிறது
என்றார் அவர்.

**அரசு நிறுவனத்தில் நெல் விற்பனை விவசாயிகளுக்கு ஆட்சியர் வலியுறுத்தல்**

First Published : 01 May 2010 06:14:12 AM IST

Last Updated : 01 May 2010 11:45:53 AM IST

திருவண்ணாமலை, ஏப். 30: திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் தங்கள் நெல்லை அரசு நிறுவனத்தில் விற்பனை செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மு.ராஜேந்திரன் கூறினார்.
திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் தங்கள் விளைச்சல் நெல்லை ( கரீப் பருவம் 2010) இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக விற்பனை செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.
கரீப்பருவ நெல்கொள்முதல் போளூர், சேத்பட், செய்யாறு, செங்கம், ஆரணி, அத்திமூர், கீழ்பென்னாத்தூர், வேட்டவலம் உள்ளிட்ட இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நடைபெற்று வருகிறது.
கொள்முதல் விலை விவரம்: கிரேடு ஏ-ரூ.1,100, பொது ரகம்-ரூ.1,050.
அரசு நிர்ணயித்துள்ள விலையில் தரக்கட்டுப்பாட்டு விதிகளுக்கு ஏலத்தில் கலந்து கொண்டு விலைப்புள்ளி அளித்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.
மேலும் திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, செய்யாறு, சேத்பட்டு ஆகிய இடங்களில் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமும், 7 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமும், 65 தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமும், நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.
கூட்டுறவு சங்கங்கள் மூலம் 3,397 மெட். டன்களும், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 20,182 மெடன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் அரசின் இச்சலுகையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ராஜேந்திரன்.

**விவசாயிகள் கடன் அட்டை: சிறப்பு முகாம் இன்று தொடக்கம்**

First Published : 01 May 2010 04:01:19 AM IST

Last Updated : 01 May 2010 11:24:20 AM IST

விருதுநகர், ஏப். 30: விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகள் கடன் அட்டைகள் வழங்க விண்ணப்பங்கள் பெற 2-வது கட்ட சிறப்பு முகாம் சனிக்கிழமை (மே 1-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை) 11 ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து இங்கு மாவட்ட அலுவலர்கள், வங்கி அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தலைமை வகித்துப் பேசிய ஆட்சியர் சிஜி தாமஸ் வைத்யன், விருதுநகர் மாவட்டத்தில் ஏற்கெனவே நடைபெற்ற சிறப்பு முகாம்களில் விவசாயிகளுக்கான கடன் அட்டைக்காக பெற்ற விண்ணப்பங்களில் மூவாயிரம் மட்டுமே உரிய ஆவணங்களுடன் தகுதியுடையதாக இருந்தன எனறார். மேலும் அவர் பேசுகையில், 2-வது கட்ட முகாமில் கடன் அட்டைக்கான விண்ணப்பங்களை உரிய ஆவணங்ளுடன் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து விவசாயிகளும் பயனடையும் விதத்தில், கடன் அட்டை வழஙகும்படி கேட்டுக் கொண்டார். கூட்டத்தில் வேளாண் துறை துணை இயக்குநர் ராமராஜ், ஜெயபாண்டியன், அனைத்து வேளாண்மை உதவி இயக்குநர்கள், வங்கி உயரதிகாரிகள் திருநாவுக்கரசு, கிருஷ்ணன்,சுகுமாரன், மணிவண்ணன். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜ ராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வற்றிப்போன குசஸ்தலை ஆறு: விவசாயிகள் கவலை**

First Published : 03 May 2010 12:37:41 AM IST



திருத்தணி அருகே நல்லாட்டூர் கிராமத்தில் வறண்டு காணப்படும் குசஸ்தலை ஆறு.

திருத்தணி, மே 2: திருத்தணி பகுதியில் இந்த ஆண்டும் மழை இல்லாத நிலையில், குசஸ்தலை ஆறு 6 ஆண்டுகளாக வறண்டு காணப்படுகிறது. இது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

திருத்தணியை ஒட்டி விவசாயத்தை சார்ந்த சொரக்காய்பேட்டை, பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு, நல்லாட்டூர், பூனிமாங்காடு, நெமிலி, ஆற்காடு குப்பம், உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப் பகுதியில் நெல், சோளம், மக்காச் சோளம், கரும்பு, மா, கொய்யா, வாழை உள்ளிட்டவை பயிர் செய்யப்படுகின்றன.

இப் பகுதி விவசாயிகள் பெரும்பாலானோர் மழை நீரை நம்பியும், குசஸ்தலை ஆற்று நீரை நம்பியும் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் இப் பகுதியில் இந்த ஆண்டும் மழை குறைவாகவே பெய்ததால் குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் தற்போது வறண்டு காணப்படுகின்றன.

இப் பகுதியில் குசஸ்தலை ஆற்றில் தண்ணீர் கடுகளவு கூட இல்லை. பல ஆண்டுகளாகவே மழைக்குறைவு காரணமாக ஆறு வறண்டு விடுவதால் இப்பகுதியில் குடிநீர் ஆதாரம் பாதிக்குமோ என்ற பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர்.

மழை குறைந்ததால் மா, துவரம் போன்ற விவசாயப் பயிர்களில் பூக்கள் சரிவரப் பூக்கவில்லை.

அப்படி சில மரங்களில் பூத்த பூக்களும் கடும் வெயிலால் உதிர்ந்து வருகின்றன. இதனால் இந்த ஆண்டு மாம்பழ உற்பத்தி குறைவாகவே இருக்கும் என விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்நிலையில் போர்வெல் மூலம் கடந்த மாதங்களில் பயிர் செய்த விவசாயப் பயிர்களும் தண்ணீரின்றி காய்ந்து வருகின்றன.

மின் பற்றாக்குறை காரணமாக நகர்ப் பகுதியில் 3 மணி நேரம் மின்விநியோகம் தடை செய்யப்படும் நிலையில் கிராமப் பகுதியில் கணக்கு வழக்கு இல்லாமல் மின்சாரம் துண்டிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

தினமலர்

**மரங்களை பாதுகாப்பதில் சிக்கல் குறைந்த அளவு வன ஊழியர் காரணம்**

மே 03,2010,00:00 IST

ஓசூர்:வனத்துறையில் 50 சதவீதம் ஊழியர்கள் பற்றாக்குறை நீடிப்பதால், குறைந்தளவு ஊழியர்களைக் கொண்டு வன விலங்கு மற்றும் மரங்களை பாதுகாப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அடுத்த அய்யூர், பெட்டமுகிலாளம், உரிகம், ஊடேதுர்க்கம், தளி மற்றும் ஜவளகிரி உள்ளிட்ட வனப்பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்ட வனப்பகுதிகள் முழுவதும் கர்நாடகா வனப்பகுதிகளையொட்டி உள்ளதால், அங்குள்ள யானைகளும் தமிழக வனப்பகுதிகளுக்குள் இடம்பெயர்ந்து மலை கிராமங் களில் கூடுதல் அட்டகாசம் செய்கின்றன.கடந்த காலத்தில் வறண்ட காலத்தில் மட்டும் யானைகள் குடிநீருக்காகவும், உணவுக்காகவும் வனப்பகுதிகளை விட்டு மலை கிராமங்களை நோக்கி படையெடுக்கும்.

தற்போது இரு ஆண்டு களாக வழக்கத்துக்கு மாறாக தேன்கனிக்கோட்டை,தளி சுற்றுவட்டார மலைகிராமங்களில் யானைகள் அடிக்கடி நுழைந்து விவசாய பயிர்களை நாசம் செய்வதோடு, வயல்களில் காவலுக்கு இருக்கும் விவசாயிகள், யானைகள் தாக்கி பலியாகி வருகின்றனர். கடந்த இரு ஆண்டுகளில் 11 விவசாயிகள் பலியாகியுள்ளனர்.

தேன்கனிக் கோட்டை மற்றும் தளி மலை கிராமங்களில் விவசாயிகள் பெரும்பாலும் ராகி,சோளம்,கம்பு,வாழை மற்றும் நெல் சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஒரு வாரமாக காட்டு யானைகள் இரவு நேரத்தில் கும்பலாக வந்து, விவசாய நிலத்துக்குள் புகுந்து ஆயிரக் கணக்கான ஏக்கர் பயிர்களை தொடர்ந்து நாசம் செய்து சென்றன.விவசாயிகள் பட்டாசு வெடித்தும், நெருப்பு வைத்தும் யானைகளை விரட்டி வருகின்றனர்.

வனத்துறையினர் பாதிக்கப்பட்ட நிலத்தை கணக்கெடுத்து, அரசு நிவாரண உதவி பெற்றுத் தருவ தாக விவசாயிகளிடம் உறுதியளித்துள்ளனர்.வனத்துறையில் யானைகளை கண்காணித்து அவற்றை கிராமப் பகுதியில் வராமல் தடுக்க போதிய ஊழியர்கள் இல்லை. தற்போது, 50 சதவீதம் ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளது. வனத்துறை யினர் பெயரளவுக்கு வனப்பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

யானைகள் கிராமங்களை நோக்கி படையெடுக்கும் போது மட்டும் சென்று, அவற்றை வனப் பகுதிகளுக்கு துரத்தி விடுகின்றனர். ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, வனப்பகுதியில் வன விலங்குகள்,மரங்களை பாதுகாப்பது கேள்விக் குறியாகியுள்ளது.

வன விலங்குகளை வேட்டையாடும் கும்பல்கள் அடிக்கடி வனப்பகுதியில் விலங்கினங் களை வேட்டையாடுவதும் தொடர்ந்து வருகிறது. வனத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி,வனத்தை பாதுகாக்க வேண்டும்.

**எகிறி நிற்கும் மல்லிகை பூ; எட்டிப் பார்க்கும் முல்லை பூ : களை கட்டும் மல்லிகை பூ சீசன்**

கோயம்பேடு : கோயம்பேடு மார்க் கெட்டில், மல்லிகை பூக்களின் சீசன் களை கட்ட துவங்கியுள்ளது.

மேலும், முல்லை பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது. கோயம்பேடு மார்க் கெட்டிற்கு சென்னையை சுற்றியுள்ள 50 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பகுதிகளில் இருந்தும், தமிழக - ஆந்திரா எல்லை பகுதிகளிலிருந்தும் மல்லிகை பூக்களின் வரத்துள்ளது. கடந்த சில வாரங்களாக மல்லிகை பூக்களின் வரத்து அதிகரித்து, தற்போது அதன் சீசன் களைகட்ட துவங்கியுள்ளது.

ஆரம்ப காலங்களில் 1 முதல் 3 டன் வரை மல் லிகை பூக்களின் வரத்து இருந்து வந்த நிலையில், கடந்த சில நாட்களாக அதன் வரத்து அதிகரித்து 5 முதல் 10 டன் வரை வரத் துள்ளது. இதனால் கிலோ ஒன் றுக்கு 75 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்கப்பட்ட மல்லிகை பூக்களின் விலை, நேற்றைய நிலவரப்படி 60 முதல் 70 ரூபாய் என குறைந்துள்ளது.

மல்லிகை பூக்களின் சீசன் களைகட்டுகின்ற நிலையில், முல்லை பூக்களின் வரவும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக வேலூர் மாவட்டத்தில் அதிகளவு உற்பத்தியாகும் முல்லை பூக்களின் வரத்து, அடுத்தடுத்த மாதங்களில் பெருமளவு அதிகரிக்கும். தற்போது இதன் விலை கிலோ ஒன்றுக்கு 75 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகின்றன.

இது குறித்து கோயம் பேடு பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கச் செயலர் மூக்கையா கூறுகையில், "சித்திரை மாதத்தில் கோவில் திருவிழா, வீட்டு விசேஷங்கள் நடைபெறுகின்ற நிலையில், மல் லிகை மற்றும் முல்லை பூக் களின் சீசன் களை கட்டத் துவங்கியுள்ளது மகிழ்ச்சி. வரும் வாரங்களில் மல்லிகை பூக்களின் விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

**பயிர்களுக்கு நஷ்ட ஈடு கொ.மு.க., கோரிக்கை**

பொள்ளாச்சி : 'பொள்ளாச்சியில் சூறாவளி காற்றால் சேதமடைந்த பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கொ.மு.க., கோரிக்கை விடுத்துள்ளது.

கொங்குநாடு முன்னேற்ற கழக தலைவர் பெஸ்ட் ராமசாமி அறிக்கை:  பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஆதியூரில் கடந்த 17ம் தேதி பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. இதில், நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளின் விளை

பொருட்கள் சேதமடைந்தன. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தாண்டு, 230 ஏக்கரில், 25 வயதுடைய 403 தென்னை மரங்கள் மற்றும் காய்க்கும் நிலையிலுள்ள ஆயிரத்து 800 வாழை மரங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளது. இதில், விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

தென்னை விவசாயத்தை மட்டும் நம்பி கிராமப்புற விவசாயிகள் உள்ள நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள இழப்பு விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆறு வீடுகள், குடியிருக்க கூட வசதி இல்லாமல் சேதமடைந்துள்ளது. விவசாயிகளின் நிலையை கருத்தில் கொண்டு, உரிய நிவாரணம் உடனடியாக வழங்க வேண்டும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**பயிர் பாதுகாப்பு குழு அமைப்பு**

மேட்டுப்பாளையம் : வனவிலங்கிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க, 15 பேர் கொண்ட 'பயிர் பாதுகாப்பு குழு' அமைக்கப்பட்டது. இதில், விவசாயிகள் பங்களிப்புடன் சிறுமுகை வனப்பகுதியில் அகழி தோண்ட முடிவு செய்யப்பட்டது.

சிறுமுகை - சத்தி மெயின் ரோட்டில் உள்ள மூளையூர், கூத்தாமண்டிபிரிவு, அம்மன்புதூர், சம்பரவள்ளி, கோவில்மேடு, பால்காரன்சாலை ஆகிய ஊர்களில், 600 விவசாயிகள் 3,000 ஆயிரம் ஏக்கரில் வாழை பயிர் செய்துள்ளனர். வனப்பகுதிக்கு அருகே வாழைத் தோட்டங்கள் உள்ளதால், தினமும் இரவில் யானைகள் வந்து வாழையை சேதம் செய்கின்றன. இதனால் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

யானைகளிடம் இருந்து விவசாய பயிர்களை பாதுகாக்க, சிறுமுகை வனத்துறை 15 கி.மீட்டருக்கு சோலார் மின்வேலி அமைத்தது. இவ்வேலியை வனத்துறையினரும், விவசாயிகளும் பராமரித்து வந்தனர். சில மாதங்கள் மட்டுமே மின்வேலியின் அருகே யானைகள் வராமல் இருந்தன. தற்போது, மரக்கிளையை உடைத்து வேலியின் மீதுபோட்டு, அதன் வழியாக விவசாய நிலங்களுக்கு செல்கின்றன. யானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், சிறுமுகை வனப்பகுதியில் 'அகழி' அமைக்கும்படி வனத்துறை அதிகாரிக்கு கோரிக்கை விடுத்தனர்.

அம்மன் புதூர் வனத்துறை கட்டடத்தில் விவசாயிகள், வனத்துறையினர் இணைந்து கூட்டம் நடத்தினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். கடந்த சில ஆண்டுகளில் மட்டும் இப்பகுதியில் யானைகளினால் 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வாழை சேதமடைந்துள்ளன. வனத்துறை சார்பில் அமைத்த மின்வேலியை யானைகள் உடைத்து சேதம் செய்துள்ளன. அதனால், மூளையூரில் இருந்து, புதுக்காடு வரை 15 கி.மீட்டருக்கு அகழி வெட்டி, விவசாய பயிர்களை பாதுகாக்க வேண்டுமென்று, கோரிக்கை விடுத்தனர்.

பெத்திக்குட்டை பீட் வனவர் கிருஷ்ணசாமி கூறுகையில்," வனப்பகுதி ஓரத்தில் அகழி தோண்ட விவசாயிகள் 10 சதவீதம் பங்களிப்பு தொகை வழங்க சம்மதித்தனர். வனத்துறையும், விவசாயிகளும் இணைந்து 'பயிர்பாதுகாப்பு குழு' அமைக்கப்பட்டது.

இக்குழுவில் தேர்வு செய்த 15 செயற்குழு உறுப்பினர்களில் தலைவர் மற்றும் பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவர். செயலாளராக வனவர் பதவி வகிப்பார். இக்குழு உறுப்பினர்கள் வழங்கும் சந்தா தொகையை வங்கியில் சேமிக்கப்படும். இதிலிருந்து விவசாயிகள் பங்களிப்பு தொகையை அரசுக்கு செலுத்தினால், உடனடியாக அகழி தோண்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யும். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று விரைவில் சிறுமுகை பகுதியில் விவசாயிகள் பங்களிப்புடன் அகழி தோண்டப்படும்," என்றார்.

நேற்று முன்தினம் சம்பரவள்ளியில் குமாரசாமி, நடராஜ், சென்னியப்பன் ஆகியோரது தோட்டத்தில் மூன்று யானைகள் புகுந்து, 750க்கும் மேற்பட்ட வாழைகளை சேதம் செய்தன. இரவு முழுவதும் விவசாயிகள் காவல் இருந்தாலும், அவர்களை ஏமாற்றி வாழைத் தோட்டத்துக்கு யானைகள் வந்து விடுகின்றன. இதேமாதிரி யானை தொல்லை தொடர்ந்தால், இப்பகுதியில் விவசாயம் முற்றிலும் அழிந்து விடுமோ என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

**கோடை மழை பொழிவு காய்கறி பயிர்கள் பாதிப்பு**

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களுக்கு முன் பெய்த கோடை மழை காரணமாக காய்கறி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கோடை வெயில் சுட்டெரிக்கும் வேளையில் திடீரென கோடை மழை பெய்தது. கடலூர் மாவட்டத்தில் சராசரியாக 30 மி.மீ., மழை பெய் தது. கடலூரில் 36 மி.மீ., ராமநத்தத்தில் 80 மி.மீ., மழையும் பெய்தது. இந்த மழை விவசாயிகள், பொது மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதே சமயத்தில் சில காய்கறி பயிர்கள் மழையால் சேதமடைந்துள்ளதால் சில விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். கடலூர் சுற்றியுள்ள உச்சிமேடு, நாணமேடு, கண்டக்காடு கிராமங்களில் காய்கறி பயிர்கள் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கத்தரிக்காய், வெங்காயம், சுரை, மலர் செடிகள் இந்த மழையினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

**விவசாய கண்காட்சி துவக்கம்**

மேலூர் : மதுரை விவசாய கல்லூரி வளாகத்தில் ஐந்து நாட்கள் நடக்கும் விவசாய கண்காட்சி நேற்று துவங்கியது.

மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த வேளாண் அதிகாரிகள் 50க்கும் மேற்பட்ட ஸ்டால்களை அமைந்திருந்தனர். அமைச்சர் தமிழரசி வருவதாக இருந்தது. அவர் வருகை தாமதமானதால் கலெக்டர் காமராஜ் கண்காட்சியை திறந்து வைத்தார்.

பின் விவசாயிகளுக்கான கூட்டம் நடைபெற்றது. ஆத்மா திட்ட இயக்குனர் சங்கரலிங்கம் வரவேற்றார். கலெக்டர் காமராஜ் முன்னிலை வகிக்க, கோவை விவசாய பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி தலைமை வகித்தார். அமைச்சர் தமிழரசி பேசினார். மூர்த்தி எம்.எல்.ஏ., மாநில வேளாண் விற்பனை வாரிய தலைவர் கணேசன், மாவட்ட ஊராட்சி தலைவர் அசோக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஐந்து நாட்கள் நடக்கும் இக்கண்காட்சியில் விவசாயிகளுக்கான செயல் விளக்கம் நடைபெற உள்ளது.

நேற்று பண்ணை இயந்திரங்கள் பற்றிய செயல் விளக்கம் கொடுக்கப்பட்டது. இன்று உழவியல், வேளாண், மண்ணியல், தோட்டக்கலை மற்றும் வேளாண் அறிவியல் மையம் சார்பில் பயிற்சி தரப்பட உள்ளது. மே 4ல் பூச்சியியல், நோயியல், பொறியியல் சார்பிலும், மே 5ல் கால்நடை, மனையியல், மீன் வளர்ச்சி துறை சார்பிலும், மே 6ல் தொண்டு நிறுவனம், தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்புத் துறை சார்பிலும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

**வெங்காய ஆராய்ச்சி நிலையம் அமைக்க கோரிக்கை**

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் சிறிய வெங்காய ஆராய்ச்சி நிலையம் அமைக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து குரூர் விவசாயி நடேசன் மாவட்ட கலெக்டர் விஜயகுமாரிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளதாவது, பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 20ஆயிரம் ஏக்கர் சிறிய வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு முழுவதும் வெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. அதிக அளவில் வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.வேப்பந்தட்டையில் உள்ள பருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிலேயே சிறிய வெங்காய ஆராய்ச்சி நிலையம் அமைத்து தோட்டக்கலை பேராசிரியர் ஒருவரை நியமித்து சிறிய வெங்காயம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு எங்கள் பகுதி சிறிய வெங்காய விவசாயிகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடநடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளார்.

**மேட்டூர் அணையில் 2,100 கனஅடி நீர் திறப்பு: 4.20 லட்சம் யூனிட் மின் உற்பத்தி**

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து குடிநீருக்காக 2,100 கன அடிநீர் திறக்கப்படுவதாலும், நீரின் அழுத்தம் குறைவாக இருப்பதாலும், அணை மின் நிலையத்தில் தினமும் 4.20 லட்சம் யூனிட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. மேட்டூர் அணை அடிவாரத்தில் 50 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் அணை மின்நிலையம், 200 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் சுரங்க மின் நிலையம் என இரு மின் உற்பத்தி நிலையம் உள்ளன.

அணையில் இருந்து விநாடிக்கு 25 ஆயிரம் கனஅடிநீர் பாசனத்திற்கு வெளியேற்றும் பட்சத்தில் இரு மின் உற்பத்தி நிலையங்களிலும் முழு அளவில் 250 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய முடியும். தற்போது அணையில் இருந்து குடிநீருக்காக மட்டும் விநாடிக்கு 2,100 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அதன் மூலம் சுரங்க மின் உற்பத்தி நிலையத்தில் 20 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். ஆனால், அணையின் நீர்மட்டம் குறைவாக இருப்பதால், நீரின் அழுத்தம் (பிரஷர்) குறைந்து விட்டதால் 17 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

தொடர்ந்து 24 மணி நேரம் ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தால், அதன் மூலம் 24 ஆயிரம் யூனிட் மின்சாரம் கிடைக்கும். தற்போது அணை மின் உற்பத்தி நிலையத்தில் 17 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.அதனால், மேட்டூர் அணை நீரின் மூலம் சில நாட்களாக தினமும் 4.20 லட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது. சுரங்க மின் உற்பத்தி நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடப்பதால், மின் உற்பத்தி நடக்கவில்லை.

**விவசாயத்தை கைகழுவியது அரசு : ஐகோர்ட் நீதிபதி ஆதங்கம்**

சிவகங்கை : சிவகங்கை அருகே மாங்குடியில் சோக்கா அறக்கட்டளை சார்பில், வி.ஆர்.லட்சுமி நாராயணன் முதியோர் மருத்துவமனை திறப்பு விழா நடந்தது.

சென்னை ஐகோர்ட் நீதிபதி ஹரிபரந்தாமன், திறந்து வைத்து பேசுகையில், "மருத்துவம், கல்வி வசதியை அரசு தான் செய்து தர வேண்டும் என, அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அரசு செய்யும் வரை காத்திராமல், தனியாரும் முயற்சி எடுக்கலாம்," என்றார்.

மாற்று திறன் குழந்தைகளுக்கான பள்ளிக்கு, இரண்டு ஏக்கர் நிலம் வழங்கிய நீதிபதி கிருபாகரன் பேசுகையில், "நாட்டின் முதுகு எலும்பான விவசாயிகள் பாதுகாக்கப்படவில்லை. அரசு விவசாய துறையை கைகழுவி விட்டது. கம்யூட்டரை உருவாக்கலாம்; அரிசியை உருவாக்க முடியாது. கிராமப்புற கட்டமைப்பு சிதைவதால், நகரத்தை நோக்கி மக்கள் செல்கின்றனர். இதனால், கூட்டு குடும்ப அமைப்பும் சிதைந்துள்ளது. இதனால், முதியோர் இல்லங்கள்

அதிகரிக்கின்றன. குடும்பங்களில் அன்பு குறைந்து வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் நிலை இன்னும் மோசமாகும்," என்றார். குணசேகரன் எம்.எல்.ஏ., காந்திய சிந்தனையாளர் ராதாகிருஷ்ணன் பங்கேற்றனர்.

**பருத்தி விளைச்சல் குறைவால் தேனியில் மூடப்படும் மில்கள்**

தேனி : பருத்தி விளைச்சல் சரிவால் மூலப்பொருட்கள் கிடைக்காமல் மில்கள் மூடப்பட்டு வருவதால், பல ஆயிரம் பேர் வேலையிழந்து வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி நடந்தது. தேனி மார்க்கெட்டிற்கு வாரம் 40 ஆயிரம் பேல்கள் பருத்தி வரத்து இருந்தது. தேனியில் இருந்த 16 பருத்தி ஆயில் மில்கள், 40 ஜின்னிங் மில்களுக்கு தங்கு தடையின்றி மூலப்பொருள்கள் கிடைத்து வந்தன. இதனால் இந்த மில்கள் தடையின்றி இயங்கின.

தரமற்ற பருத்தி விதைகள், நோய் தாக்குதல், விளைச்சல் வீழ்ச்சி, விலை குறைவு, உற்பத்தி செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களால் பருத்தி விளைவித்த விவசாயிகள் பெரிய அளவில் பாதிப்பிற்கு உள்ளாகினர். இதனால் பருத்தியில் இருந்து கரும்புக்கு மாறி விட்டனர். எனவே பருத்தி சாகுபடி பரப்பு குறைந்து பருத்தி வரத்து குறைந்து விட்டது. எனவே மூலப்பொருட்கள் கிடைக்காமல் தேனியில் 13 பருத்தி ஆயில் மில்களும், 30 ஜின்னிங் மில்களும் மூடப்பட்டு விட்டன.

இந்த மில்களில் வேலை பார்த்த பல ஆயிரம் பேர் வேலையிழந்துள்ளனர். அதே போல் பருத்தி வியாபாரம் சார்ந்த துணைத்தொழில்களும் பெரிய அளவில் சரிந்துள்ளது. தற்போது மாவட் டத்தில் 370 ஏக்கருக்கும் குறைவான நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப் பட்டுள்ளதால் மீதம் உள்ள மில்களுக்கு மூலப்பொருட்கள் வெளி மாவட் டங்களில் இருந்து கொண்டு வரப்படுகிறது. மாவட்டத்தில் பருத்தி விளைச்சலை அதிகரிக்க விவசாயத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அரிசி ஒதுக்கீட்டில் தொடரும் தாமதம்**

கூடலூர் : முதியோர் உதவித் தொகை கிடைத்தவர்களுக்கு 7 மாதங்களாக இலவச அரிசி வழங்கப்படவில்லை.

கடந்த ஆண்டு செப்.,ல் கருநாக்கமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி ஆகிய ஊராட்சிகளில் உள்ள 60க்கும் மேற் பட்டோருக்கு முதியோர் உதவித் தொகை வழங்க உத்தரவு வந்துள்ளது. அதன்படி ஒவ்வொரு மாதமும் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை பெற்று வருகின்றனர். ஆனால், இவர்களுக்கு வழங்க வேண்டிய இரண்டு கிலோ இலவச அரிசி இதுவரை வழங்கவில்லை. ஒவ்வொரு மாதமும் ரேஷன் கடைக்கு செல்லும் இவர்களை, கடை பணியாளர்கள் இலவச அரிசி ஒதுக்கீடு இதுவரை வரவில்லை எனக்கூறி திருப்பி அனுப்பி வருகின்றனர்.

**மழைநீரை சேமிக்க நடவடிக்கை தேவை**

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி தொகுதியில் பெய்த கோடை மழையால் தேங்கி உள்ள நீரை பாசனத்திற்கு திறக்காமல் இருப்பில் வைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆண்டிபட்டி பகுதியில் நேற்று முன்தினம் பெய்த மழையால் பல ஊர்களில் உள்ள குளங்கள், கண் மாய்களில் நீர் தேங்கி உள்ளது. பாசனக் கண்மாய்களில் உள்ள நீரை பாசனத்திற்கு திறக்காமல் இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

இது குறித்து மக்களுக்கு ஊராட்சி தலைவர் அய்யாத்துரை கூறியதாவது: ஆண்டிபட்டியில் கடந்த ஆண்டு மழை பொய்த்ததால் குளங்கள், கண்மாய்கள் வறண்டு நிலத்தடி நீர் மட்டம் பல அடிக்கு கீழே சென்று இறவை பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது கோடை மழையால் குளங்கள், கண்மாய்களில் தேங்கிய நீரை ஒரு போக பாசனத்திற்கு கூட பயன்படுத்த முடியாது. நீரை தேக்கி வைத்திருந்தால் 2 மாதம் வரை இருக்கும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் மேம்படுவதுடன் குடிநீர் ஆதாரங்களும் பெருகும். இறவை பாசனத்தையும் பாதிப்பில் இருந்து தவிர்க்கலாம்.

**விவசாயிகளுக்கு இலவச மருந்துகள்**

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகா பகுதியில் பயிரிடப் பட்டுள்ள வெற்றிலை கொடியில் வாடல் நோய் தாக்கியுள்ளது.

இந்த நோயை கட்டுப்படுத்த தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டம் மூலம் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பயிர் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் ரேஷன் கார்டு ஜெராக்ஸ், போட்டோ இரண்டு கொடுத்து, வடுகபட்டி விவசாய அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**அறுவடை செய்த நெல்லை இடைத்தரகர் இல்லாமல் விற்பனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

திருவண்ணாமலை:விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை, இடைத்தரகர் இல்லாமல் நேரிடையாக அரசு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்து, பயன் பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இது குறித்து தி.மலை. மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:திருவண்ணாமலை. மாவட்ட விவசாயிகள் கரீப் பருவத்தில் அறுவடை செய்த நெல்லை, இடைத்தரகர் இன்றி நேரடியாக விற்பனை செய்ய ஏதுவாக அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக கொள்முதல் செய்ய ஆணையிட்டுள்ளது.கரீப் பருவ நெல் கொள்முதல் போளூர், சேத்பட், செய்யாறு, செங்கம், ஆரணி, அத்திமூர், கீழ்பென்னாத்தூர், வேட்டவலம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் மூலம் இப்போது நடந்து வருகிறது.

கொள்முதல் விலை விவரம்:ஆதாரவிலை மற்றும் ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு:கிரேடு ஏ ரகம் ரூ. ஆயிரத்து 100, பொது ரகம் ரூ. ஆயிரத்து 50. அரசு நிர்ணயத்துள்ள விலையில் தரக்கட்டுப்பாட்டு விதிகளுக்கு ட்பட்டு ஏலத்தில் கலந்து கொண்டு விலைப்புள்ளி அளித்து நெல்கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.மேலும் திருவண்ணாமலை., தண்டராம்பட்டு, செய்யாறு, சேத்துபட்டு ஆகிய இடங்களில், நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர மாவட்டத்திலுள்ள 7 கூட்டுறவு விற்பனை சங்கங்களின் மூலம் 65 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 3 ஆயிரத்து 397 மெட்ரிக் டன்னும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் மூலம் 20 ஆயிரத்து 182 மெட்ரிக் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.எனவே திருவண்ணாமலை. மாவட்ட விவசாயிகள் அரசின் இந்த சலுகையை முழுமையாக பயன்படுத்தி, அறுவடை செய்த நெல்லை அரசு நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்து பயன்பெறலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மிதமிஞ்சிய மின்வெட்டு! பயிருக்கு தண்ணீர் விட முடியாமல் காய்கறி, தென்னை விவசாயிகள் கவலை**

பொங்கலூர் : பகலில் ஆறு மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுவதால், காய்கறி, தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

பொங்கலூர் சுற்றுவட்டார பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு தினந்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. மின்வெட்டு காரணமாக, இரு நாட்களுக்கு ஒருமுறை கூட, நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். மழை காலங்களில் அதிகம் தண்ணீர் தேவைப்படாததால், பிரச்னை பெரிய அளவில் இருந்ததில்லை. மழை சீசனில் மின் தேவை மற்றும் மின் இழப்பு அதிகம் இருக்காது.

தற்போது, பி.ஏ.பி., பாசனம் இல்லாத பெரும்பாலான பகுதிகளில் கிணறுகள் வறண்டு விட்டன. நீர் மட்டம், 1,000 அடிக்கும் கீழ் சென்றுவிட்டது. ஆழ்குழாய் கிணறுகளில் மட்டுமே சிறிதளவு நீர் உள்ளது. ஆழ்குழாய் கிணறுகளில் நீர் எடுக்க அதிகளவில் 'கம்ப்ரசர்' கள் பயன்படுத்தப்படுகின்றன. 24 மணி நேரமும் 'கம்ப்ரசர்' இயங்கினால் மட்டுமே தென்னையை காப்பாற்ற முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயத்துக்கான மின்சார அளவை வாரந்தோறும் குறைத்து, அறிவிப்பு வெளியிடுவதால் விவசாயிகள் பீதி அடைந் துள்ளனர். கடந்த ஜன., மாதம் விவசாயத் துக்கான மின்சாரம் 16 மணி நேரத்தில் இருந்து 14 மணி நேரமாக குறைக்க மின் வாரியம் முடிவு செய்தது. மார்ச் 19ல் 10 மணி நேரமாக குறைக்கப்பட்டது. மார்ச் 27ல் ஒன்பது மணி நேரமாக குறைக்கப் பட்டது. ஒன்பது மணி நேரம் என்பது ஏட்டளவில் மட்டுமே அமலில் உள்ளது. ஏதாவது ஒரு காரணத்தைக்கூறி, கூடுதல் நேரம் மின்வெட்டு செய்யப்படுகிறது.

இரவில் மூன்று மணி நேரம், பகலில் ஆறு மணி நேரம் மட்டுமே கிராமப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. மின் தட்டுப்பாட்டால் பயிர்கள் வாடி, பூக்கள் உதிர்ந்து விடுகின்றன. இதன் காரணமாக, விளைச்சல் பாதிக்கப்பட்டு, விவசாயம் கடுமையாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட் டுள்ளது. கோடையில் விவசாயம் செய் தால் மட்டுமே விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும். மின் வெட்டு, இதற்கு சோதனையாக அமைந்து விட்டது.

விவசாயிகளுக்கு இயற்கையும் ஒத்துழைக்க மறுப்பதால், விவசாயிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. மின் தட்டுப்பாட்டை சமாளிக்க, தொழில் துறையினர் ஜெனரேட்டர் பயன் படுத்துவதைப் போல, விவசாயிகளால் ஆயில் என்ஜின் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. ஏனெனில், விவசாயிகள் பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பதே காரணம்.

மழையளவு குறைந்து கொண்டே வருவதால், இயற்கையை நம்பி, விவசாயம் செய்வது மிகவும் அரிதாகி விட்டது. பொங்கலூர் பகுதி, கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணற்றுப் பாசனத் தையே பெரிதும் நம்பியுள்ளது. மின் வெட்டால் ஆழ்குழாய் கிணற்றுப் பாசனம் செய்வது சிரமமாகி விட்டது. மின்வெட்டு தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில், விவசாயத்தை கைவிட்டு மாற்றுத் தொழிலுக்கு செல்லும் நிலை ஏற்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

எதிர்கால மின் தேவையை சமாளிக்க, மாற்று வழிகளை கையாண்டால் மட்டுமே கிராமப்புற பொருளாதாரம் முன்னேறும். மரபுசாரா எரிதியை பயன் படுத்த அரசு பெருமளவில் மானியம் வழங்க வேண்டும். வீடுகளில் மின் விளக்குகளுக்கு மாற்றாக, சோலார் மின் விளக்குகளை பயன்படுத்த அறிவுறுத்த வேண்டும்.

லட்சக்கணக்கில் பணம் செலவழித்து வீடு கட்டுவோருக்கு சில லட்சங்களை செலவழித்து சோலார் மின் விளக்குகள் பொருத்துவது பெரிய செலவாக இருக்காது. வாட்டர் ஹீட்டர் களுக்குப் பதிலாக சோலார் சிஸ்டம் நிறுவுவதை கட்டாயப்படுத்த வேண்டும். இதன் மூலம் பெருமளவு மின்சாரத்தை மிச்சப் படுத்த முடியும்.

---

**மஞ்சள் விலை அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

மே 03,2010,00:00 IST

---



ஆத்தூர்:ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், குவிண்டால் 15 ஆயிரத்து 959 ரூபாய்க்கு விற்றதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சேலம் மாவட்டம் ஆத்தூர், கச்சிராபாளையம், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் மஞ்சள் அறுவடை பணி நடந்து வருகிறது.

மஞ்சளை சுத்தம் செய்து, ஈரோடு, நாமக்கல் மாவட்டம் நாமகிரிபேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், சேலம் மாவட்டம் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், தனியார் மண்டிகளில் நடக்கும் மறைமுக டெண்டர் ஏலத்தில் விவசாயிகள் விற்பனை செய்வது வழக்கம்.ஆத்தூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த மார்ச் 6ம் தேதி, ஒரு குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 13ம் தேதி ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 899 ரூபாய், 20ம் தேதி ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 669 ரூபாய், 27ம் தேதி ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 320 ரூபாய் என்ற அளவில் விற்பனையானது.

ஏப்., 3ம் தேதி ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 529 ரூபாய், 10ம் தேதி ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 677 ரூபாய், 17ம் தேதி ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 860 ரூபாய்க்கு விற்பனை யானது. 24ம் தேதி ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 169 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று முன்தினம் மே 1ம் தேதி இரவு நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 959 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக 15 ஆயிரத்து 359 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 600 ரூபாய், குறைந்த பட்சமாக 15 ஆயிரத்து 159 ரூபாய், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 12 ஆயிரத்து 779 ரூபாய், குறைந்த பட்சமாக 11 ஆயிரத்து 550 ரூபாய்க்கு ஏலம் போனது.

மேலும், 1,100 மூட்டைகள் கொண்ட 600 குவிண்டால் மஞ்சள், ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. தொடர்ந்து நடந்து வரும் மஞ்சள் ஏலத்தில், கடந்த வாரத்தைக் காட்டிலும் குவிண்டால் 1,800 ரூபாய் அளவிற்கு மஞ்சள் விலை அதிகரித்து இருந்தது. தங்கம் விலையை மிஞ்சும் வகையில் முதன்முறையாக குவிண்டால் மஞ்சள் 15 ஆயிரத்து 959 ரூபாய்க்கு விற்பனையானது, விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

தினத் தந்தி

## *கீழ்பவானி வாய்க்கால்களுக்கு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் விடுவது நிறுத்தம்*

*முத்தூர்,மே.3–*
*பவானி சாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப் பட்டு உள்ளது.*
*பவானிசாகர் அணை*
*ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத் தில் உள்ள முத்தூர்–நத்தக்காடையூர் பகுதிகளில் அதிக ஏக்கரில் விவசாய பணிகள் செய்யப்படுகிறது. பவானிசாகர் அணை தண்ணீர் எல்.பி.பி. வாய்க்கால்கள் மற்றும் பவானி ஆற்றுக்கு திறந்து விடப்படும் போது தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில் உள்ள விவசாயிகள் பயன் அடைந்து வரு கின்றனர்.*
*திருப்பூர் மாவட்டம் முத்தூர்–நத்தக்காடையூர் பகுதிகளில் உள்ள விவசாயிகள் கீழ்பவானி வாய்க்கால் களில் திறந்து விடப்படும் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர். இந்த அணையில் ஆண்டுதோறும் முதல் மற்றும் 2–ம் போகம் என்று இரு பிரிவுகளாக திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் நெல், எள், நிலக்கடலை, சூரியகாந்தி, மக்காசோளம், மரவள்ளி கிழங்கு மற்றும் பயிறு வகைகள், காய்கறி வகைகள் பயிரிடப்படுகின்றன.*
*நெல் சாகுபடி*
*பவானிசாகர் அணையின் மொத்த கொள்ளளவு 120 அடி. அதில் 105 அடி வரை தண்ணீரை தேக்கி வைக்க முடியும். மீதி உள்ள 15 அடி சேறும், சகதியுமான பகுதியாகும். பவானிசாகர் அணைக்கு நீலகிரி மலைப்பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து நீர் வரத்து அதிகரிக்கும்.*
*ஈரோடு மாவட்டத்துக்கு தற்போது இந்த அணையில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்காக இரட்டைப்படை மதகுகளிலும், திருப்பூர் மாவட்டம் முத்தூர்–நத்தக்காடையூர் பகுதிகளில் இரண்டாம் போகத்துக்காக ஒற்றைப்படை மதகுகளிலும் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்வதற்காக கடந்த ஜனவரி மாதம் 5–ந் தேதி முறைத்தண்ணீர் திறந்து விடப்பட்டது.*
*தண்ணீர் நிறுத்தம்*

இதன் மூலம் இப்பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் எண்ணெய் வித்து பயிர்களான சூரியகாந்தி, நிலக்கடலை, மக்காசோளம் ஆகியவற்றை பயிரிட்டனர். பவானிசாகர் அணையின் நீர் மட்டம் நேற்று 67.63 அடியாக இருந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றுக்கு 400 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. ஆனால் கீழ்பவானி வாய்க்கால்களில் பாசனத்துக்காக திறந்து விடப்படும் தண்ணீர் கடந்த 30–ந் தேதி மாலையுடன் நிறுத்தப்பட்டு உள்ளது.
இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங் களில் பலத்த மழை பெய்தது. நீலகிரி மலைப்பகுதிகளில்பெய்த பலத்த மழை காரணமாக நேற்று முன்தினம் அதிகபட்சமாக அணைக்கு 2000 கன அடிக்கும் அதிகமாக தண்ணீர் வரத்து இருந்தது.
தொடர்ந்து இந்த பகுதிகளில் மழை பெய்தால் இன்னும் கூடுதலாக தண்ணீர் வரத்து இருக்கும். இதன் மூலம் அணையின் நீர்மட்டம் மீண்டும் உயரம் வாய்ப்புள்ளது. பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்ட போதிலும், இப்பகுதிகளில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழை காரணமாக விவசாய விளை நிலங்கள் நன்கு நனைந்து, விவசாய பயிர்கள் பசுமையாகி, குளிர்ந்த காலநிலை நிலவுகிறது.

## ஜன–ஏப்ரல் மாத காலத்தில் காபி ஏற்றுமதி 42% அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு 2010–ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஜனவரி – ஏப்ரல்) நாட்டின் காபி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 42 சதவீதம் அதிகரித்து ஒரு லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில், மதிப்பின் அடிப்படையில், காபி ஏற்றுமதி 34 சதவீதம் அதிகரித்து ரூ.1,025 கோடியாக உயர்ந்துள்ளது.
இது குறித்து காபி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் ரமேஷ் ராஜா தெரிவிக்கையில், “சர்வதேச அளவில் காபிக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இந்நிலையில், இந்த தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில், உள்நாட்டில் காபி உற்பத்தியும் நன்றாக உள்ளது. இதனையடுத்து, சென்ற ஐந்து மாதங்களாக காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது” என்று தெரிவித்தார்.

நடப்பு 2009–10–ஆம் காபி பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) நாட்டின் காபி உற்பத்தி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 10 சதவீதம் அதிகரித்து 2.62 லட்சம் டன்னிலிருந்து 2.89 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.